நாங்கள் எங்கள் வரலாற்றை எழுதவில்லை. பாரம்பரியம் என்பது பேச்சோடு நின்று விடுகிறது. நாங்கள் எதையுமே பேணிப்பாதுகாப்பதில்லை. மன்னன் சாஜஹான் காலையில் என்ன உணவு அருந்தினான் என்று தொடங்கி அத்தனையும் பதிவு செய்யப்பட்டன என்று ஒரு பத்திரிகையாளரான நண்பர் சொன்னார். அந்தளவு இல்லையென்றாலும் எங்கள் வாழ்வு, எங்கள் மக்கள், எங்கள் கலைஞர்கள் பற்றிய தகவல்கள் சேகரிக்கப்படவேண்டும். பதிவு செய்யப்படவேண்டும்.

இந்த நோக்குடன் "தாய்வீடு" பத்திரிகை எங்கள் ஈழத்து மண்ணின் கிராமங்களில், ஊர்களில் வாழ்ந்த பிரபலமடைந்தவர்களுடன், தெரியப்படாமல் போய்விட்ட எங்கள் கலைஞர்களைப் பற்றியும் எழுதும்படி வேண்டுகோள் விடுக்கிறது. கட்டுரைகளை சுருக்கமாக, எழுதி அனுப்புங்கள். களம், 'தாய்வீடு' தரக் காத்திருக்கிறது. கருத்து உங்களுடையது. கட்டுரைகளை செதுக்கி சொற்சித்திரங்களாக்கும் பொறுப்பு எங்களுடையது.

*K.S. பாலச்சந்திரன்*

## இது ஓர் ஈழத்துக் கலைஞர்களின் பதிவுத் தொடர்...

# வில்லிசைக் கலைஞர் நாச்சிமார் கோவிலடி ராஜன்

**ஆழத்து முத்துக்கள் 30**

**- சந்திரவதனா செல்வகுமாரன் -**

நாச்சிமார்கோயிலடி இராஜன் ஈழத்தின் புகழ்பெற்ற வில்லிசைக் கலைஞர்களில் ஒருவர். தற்போது புலம் பெயர்ந்து ஜெர்மனியில் வசித்து வருகிறார்.

இவர் இலங்கையின் யாழ்ப்பாணம், நாச்சிமார்கோயிலடியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். யாழ். வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் கல்வி பயின்ற இவர் தற்சமயம் ஜேர்மனியில் பிறேமன் நகரில் வாழ்ந்து வருகிறார்.



பாடசாலையில் பயின்ற காலத்திலேயே இவரது கலை ஆர்வம் வெளிப்பட்டது.

இவர் வில்லிசை நிகழ்ச்சிகளை 1968இல் ஆரம்பித்து இற்றைவரை நடாத்தி வருகிறார். 1972இலிருந்து "நாச்சிமார்கோயிலடி இராஜன் வில்லிசைக் குழுவை" நடாத்தி வருகின்கிறார். 1993இல் ஜெர்மனியின் றெயினை ஜெர்மன் தமிழ்ச் சங்கத்தின் வாணி விழாவில் பெருங்கவிக்கோ வ.மு.சேதுராமனால் "ஈழவில்லிசைச் செம்மல்" என்ற பட்டத்தைப் பெற்றார். 1996இல் கனடாவில் நிகழ்ந்த உலகத் தமிழர் பண்பாட்டு இயக்க மாநாட்டில் அதன் தலைவர் வீரப்பனால் "வில்லிசைக் காவலர்" என்ற பட்டத்தைப் பெற்றார்.

ரீ.ரீ.என் தொலைக்காட்சியில் வழக்கமான இதிகாச, புராணக்கதைகள் அல்லாமல் சமகால புலம்பெயர் வாழ்வுபற்றி பல எழுத்தாளர்கள் எழுதிய சிறுகதைகளை இவர் வில்லிசைக்கென உருமாற்றி பாடல்களையும் இணைத்து சிறப்பாக வழங்கியிருக்கிறார். இவற்றுள் சாந்திரமேஸ் வன்னியனின் "காசுமரம்", இராஜன் முருகவேலின் "சாகா வரம்", சந்திரவதனா செல்வகுமாரனின் "பாதை எங்கே" போன்ற சிறுகதைகளும் அடங்கும்.

நாடகத்துறையிலும் இவருக்கு ஈடுபாடு உண்டு. ஜெர்மனியில் 1993, 1994, 1995, 1998 ஆகிய நான்கு ஆண்டுகளிலும் நடைபெற்ற நாடகப் போட்டிகளில் நான்கு முறை களும் முதற்பரிசுகளைப் பெற்றுள்ளார். பிறேமன் தமிழ் கலை மன்றத்திற்காக பல நாடகங்களை எழுதி இயக்கியுள்ளார். மூன்று தடவைகள் சிறந்த இயக்குனருக்கான தங்கப்பதக்கத்தைப் பெற்றுள்ளார்.

1994இல் இராட்டிங்கன் ஆதவ கிருஸ்ணா கலைமன்றம் நடாத்திய நாடகப் போட்டியில் "எதிர்பார்ப்புகள்" நாடகம் இவரது இயக்கத்தில் முதற் பரிசு பெற்றது. அதற்காக சிறந்த இயக்குநராக தெரிவுசெய்யப்பட்டு இராட்டிங்கன் ஆதவ கிருஸ்ணா கலைமன்றத்தால் இவருக்கு தங்கப்பதக்கம் வழங்கப்பட்டது.

1995இல் இராட்டிங்கனில் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் நடாத்திய நாடகப் போட்டியில் "நீர்க்கோலம்" நாடகம் முதற் பரிசுக்கு தெரிவானது. நீர்க்கோலம் சிறந்த நாடக பிரதியாக தெரிவு செய்யப்பட்டு அதற்காக ஒரு தங்கப்பதக்கமும், அந்த நாடகத்தை இயக்கியதற்காக சிறந்த இயக்குநராக தெரிவு செய்யப்பட்டு அதற்காக ஒரு தங்கப்பதக்கமும், சான்றிதழும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் வழங்கப்பட்டது.

1998 இல் எசன் நகரில் ஈழமுரசு பத்திரிகை நடாத்திய நாடகப் போட்டியில் "சுமைகள்" நாடகம் முதற் பரிசுக்கு தெரிவு செய்யப்பட்டது. அதற்காக சிறந்த இயக்குநராக தெரிவு செய்யப்பட்டு ஈழமுரசு பத்திரிகையால் தங்கப்பதக்கம் வழங்கப்பட்டது

புகலிட திரைப்படத்துறையிலும் இவருக்கு ஆர்வம் உண்டு. நினைவுமுகம் திரைப்படத்திற்கு திரைக்கதை, உரையாடல் எழுதி இணை இயக்கம், தயாரிப்பு ஆகியவற்றில் தடம் பதித்துள்ளார். தொடர்ந்து ஏ.ரகுநாதனின் தயாரிப்பில் பாரிசிலிருந்து தயாரிக்கப்பட்ட தயவுடன் வழிவிடுங்கள் படத்திலும் நடித்துள்ளார். யாரிவர்கள், பொறி, இப்படியுமா? ஆகிய குறும்படங்களை எழுதி இயக்கியுள்ளார்.

இவற்றுள் 'இப்படியுமா' என்ற குறும்படத்தில் மதி சாந்தி, கவிஞர் மட்டுவில் ஞானகுமாரன், பெனடிற்றா, ஞானசெல்வம், ரகுநாதன் ஆகியோர் நடித்திருக்கிறார்கள். ஈழத் தமிழரின் இன்னல்களில் ஒன்றான சீட்டுப் பொறிக்குள் சிக்குப்படுவதால் உண்டாகும் அவலங்களை சித்தரிக்கும் "பொறி" என்ற குறும்படத்தை. சுவிசைச் சேர்ந்த அஜீவன் ஒளிப்பதிவு செய்ய, ஜேர்மனி ரமேஷ் தொகுக்க நாச்சிமார் கோவிலடி ராஜனின் கதை வசனம் நெறியாள்கையில் ராமகிருஷ்ணன் (கொலண்ட்) தங்கராசா, சித்திரா பெனடிற்றா, நவரட்ணராஜா, யோகநாதன், பிரசன்னா மோகன் ஞானச்செல்வன் ஜர்மி ஆகியோர் முக்கிய பாத்திரங்களில் நடித்திருக்கிறார்கள்.

இவற்றோடு இலண்டனில் தயாராகி வரும் ஈழவர் திரைக் கலை மன்றத்தின் நீர்கோலம் திரைப்படத்திற்கு கதை, வசனம் எழுதியுள்ளார். பாரிசிலிருந்து தயாரிக்கப்படும் ஈழத்தவரின் முதல் திரைத் தொடர் "நேசங்களு"க்காக திரைக்கதை, உரையாடலில் பங்கெடுத்து வருகின்றார்.

(நன்றி – மனஓசை இணையத்தளம்)



chandravthana.s@thaiveedu.com

■ ■ ■

கலைஞர்கள் பற்றிய விபரங்களையும் அவர்களுடைய புகைப்படங்களுடன் உங்களுடைய பெயர், தொலைபேசி இலக்கம், புகைப்படம் மற்றும் மின்னஞ்சல் முகவரியையும் தாய்வீட்டிற்கு அனுப்பிவையுங்கள்.

**Editor**
**P.O.Box #63581**
**Woodside Square**
**1571 Sandhurst Cir.**
**Toronto, ON. M1V 1V0**
**Fax : 416.849.0594**
**E-mail : info@thaiveedu.com**

■ ■ ■

இணையத்தளத்திலும்

'தாய்வீடு'

www.thaiveedu.com